ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

04.06.2026

1. வந்தேன் என்றருளும் கந்தப்பெருமானை
வரமாக அடைந்து அரங்கன் யானும்
சிந்தைமகிழ பிரணவக்குடில் படைத்து
சிறப்பறிவு உலகோரும் அடைய வேண்டி

2. வேண்டியே அற்புதம் நிகழ்த்தி வர
வேண்டியே என் பீடம் வந்தடைந்து
தொண்டாற்றி தொண்டர்களாகிவிட
தேற்றம் பெறுவீர் என்று கூறி

3. கூறியே பராபவ விடை திங்கள்
குறைவிலா சூல குருவார அருளாசி
அறிவிப்பேன் அரங்கனும் மக்கட்கு
அன்னதான மகா சேவை தன்னுள்

4. தன்னுள்ளே தன்னார்வம் கொண்டு
தரணியோர் சரணாகதி கண்டு
அண்ணலே அரங்கா முருகா என
அனுதினமும் செபதபமாக பூசை

5. பூசை செய்து புண்ணியத்தில்
பொருளுதவி செய்து வருதலுற
நேசம்பட ஆசான் என் கரங்கள்
நிலையுயர ஆசிதனை தந்து

6. தந்துமே கடைநாளும் காக்கும்
தான் என்ற அகந்தை போக்கி
சிந்தை தெளிவு திடமும் கூட்டி
செயலில் வெற்றி காரிய சித்தியென

7. சித்தியென சகல மாற்றமும்
செய்து அரங்கன் காப்பேன்
உத்தமமான மேலவர் தொடர்பும்
உங்கள் வேண்டல் யாவும் நிறைவேற்றி

8. நிறைவேற்றி அற்புதம் தருவேன்
நினைவில் என் நாமசெபம்
குறைவின்றி நாளும் தொடர
குரு என்று நிலை கடந்து

9. கடந்துமே எல்லா வடிவிலும்
கருணை கொண்டு இறங்கி அருள்வேன்
இடர் என்ற நிலை கடந்து வாழ
எல்லா பாதுகாப்பும் கூட்டி அருள்வேன்

10. அருளவே ஞானிகள் பூசைபட
அன்னதான சேவை செய்து
வரம் வேண்ட வாழ்வில் மாற்றம்
வடிவேலனாருடன் அரங்கன் யானும்

11. யானும் தந்து காப்பேன் மீட்பேன்
உயரிய ஞான சபை பிரணவக்குடிலே
ஞானவான்களை உலகுக்கு தருகின்ற
ஞானசபையாகும் அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி